# வரம் கேட்டு வருகின்றேன்

வரம் கேட்டு வருகின்றேன் இறைவா - என்
குரல் கேட்டு அருளாயோ தலைவா (2)

பகைசூழும் இதயத்துச் சுவரையெல்லாம் - என்
பாசத்தால் தகர்க்கின்ற வரம் கேட்கின்றேன்
புகைசூழ்ந்து இருள் வாழும் மனதில் எல்லாம் (2)
உன் பெயர் சொல்லி ஒளியேற்ற உனைக் கேட்கின்றேன்

வரம் கேட்டு வருகின்றேன் இறைவா - என்
குரல் கேட்டு அருளாயோ தலைவா

நலமெல்லாம் எனக்கென்று தேடும் குணம் - இனி
நாள்தோறும் இறக்கின்ற வரம் கேட்கின்றேன்
பலியாக பிறர்க்கென்னை அளித்திட்டபின் (2)
என் பரிசாக உனை கேட்கும் வரம் கேட்கின்றேன்

வரம் கேட்டு வருகின்றேன் இறைவா - என்
குரல் கேட்டு அருளாயோ தலைவா

எளியோர் தம் விழி பேசும் துயரமெல்லாம் - என்
இதயத்தை பிளக்கட்டும் எனக் கேட்கின்றேன்
ஒளியில்லா இல்லங்கள் இதயங்களில் (2)
நல் ஒளியேற்றும் விளக்காக வரம் கேட்கின்றேன்

வரம் கேட்டு வருகின்றேன் இறைவா - என்
குரல் கேட்டு அருளாயோ தலைவா (2)